10th Physics Questions in Tamil – [New Book]

[Book Back + Important Questions]

பத்தாம் வகுப்பு - இயற்பியல்

1. இயக்க விதிகள்

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. கீழ்க்கண்டவற்றுள் நிலைமம் எதனைச் சார்ந்தது?

அ) பொருளின் எடை ஆ) கோளின் ஈர்ப்பு முடுக்கம்

இ) பொருளின் நிறை ஈ) அ மற்றும் ஆ

2. கணத்தாக்கு கீழ்க்கண்டவற்றுள் எதற்குச் சமமானது?

அ) உந்த மாற்றும் வீதம் ஆ) விசை மற்றும் காலமாற்ற வீதம்

இ) உந்த மாற்றம் ஈ) நிறை வீத மாற்றம்

3. கீழ்கண்டவற்றுள் நியூட்டனின் மூன்றாம் விதி எங்கு பயன்படுகிறது?

அ) ஓய்வுநிலையிலுள்ள பொருளில் ஆ) இயக்க நிலையில் பொருளில்

இ) அ மற்றும் ஆ ஈ) சமநிலையுள்ள பொருட்களில் மட்டும்

4. உந்த மதிப்பை y அச்சிலும் காலத்தினை c அச்சிலும் கொண்டு ஒரு வரைபடம் வரையப்படுகிறது. இவ்வரைபட சாய்வின் மதிப்பு

அ) கணத்தாக்குவிசை ஆ) முடுக்கம்

இ) விசை ஈ) விசை மாற்ற வீதம்

5. வீசையின் சுழற்சி விளைவு கீழ்காணும் எந்த விளையாட்டில் பயன்படுகிறது?

அ) நீச்சல் போட்டி ஆ) டென்னி*

இ) சைக்கிள் பந்தயம் ஈ) ஹாக்கி

6. புவிஈர்ப்பு முடுக்கம் g-ன் அலகு ms^{-2} ஆகும். இது கீழ்காண் அலகுகளில் எதற்கு சமமாகும்?

அ) cm^{-1} **ஆ) Nkg^{-1}**

இ) Nm^2kg^{-1} ஈ) cm^2s^{-2}

7. ஒரு கிலோ கிராம் எடை என்பது .... க்கு சமமாகும்.

அ) 9.8 டைன் ஆ) 9.8×10^4 N

இ) 98×10^4 டைன் ஈ) 980 டைன்

8. புவியில் M நிறை கொண்ட பொருள் ஒன்று புவியின் ஆரத்தில் பாதி அளவு ஆரம் கொண்ட கோள் ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அதன் நிறை மதிப்பு

அ) 4M ஆ) 2M இ) M/4 **ஈ) M**

9. நிறை மதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில் 50% சுருங்கினால்புவியில் பொருட்களின் எடையானது?

அ) 50% குறையும் ஆ) 50% அதிகரிக்கும்

இ) 25% குறையும் **ஈ) 300% அதிகரிக்கும்**

10. ராக்கெட் ஏவுதலில் .... விதிகள் பயன்படுத்தப்படுகிறது

அ) நியூட்டனின் மூன்றாம் விதி ஆ) நியூட்டனின் பொது ஈர்ப்பு விதி

இ) நேர் கோட்டு உந்த மாறாக் கோட்பாடு **ஈ) அ மற்றும் இ**

11. விசையின் செயல்பாட்டால் பொருள் மீது ஏற்படும் விளைவுகளைப் பற்றிய அறிவியல் பாடம் …………

அ) இயங்கியல் ஆ) நிலையியல்

இ) இயக்கவிசையியல் **ஈ) இயந்திரவியல்**

12. விசையின் செயல்பாட்டால் ஒய்வு நிலையிலுள்ள பொருள்மீது ஏற்படும் விளைவுகளைப் பற்றிய அறிவியல்

அ) நிலையியல் ஆ) இயக்கவியல்

இ) இயக்கவிசையியல் ஈ) இயந்திரவியல்

13. விசையின் செயல்பாட்டால் இயக்க நிலையிலுள்ள பொருள் மீது ஏற்படும் விளைவுகளைப் பற்றிய அறிவியல்

அ) இயந்திரவியல் ஆ) நிலையியல்

இ) இயங்கியல் ஈ) ஏதுமில்லை

14. நிலையாக உள்ள ஒவ்வொரு பொருளும் தமது ஓய்வு நிலை மாற்றத்தை எதிர்க்கும் பண்பு

அ) இயக்கத்தில் நிலைமம் ஆ) திசையில் நிலைமம்

இ) விசையில் நிலைமம் **ஈ) ஓய்வில் நிலைமம்**

15. இயக்க நிலையில் உள்ள பொருள் தமது இயக்க நிலைமாற்றத்தை எதிர்க்கும் பண்பு

அ) திசையில் நிலைமம் **ஆ) இயக்கத்தில் நிலைமம்**

இ) ஓய்வில் நிலைமம் ஈ) ஏதுமில்லை

16. இயக்க நிலையில் உள்ள பொருள் இயங்கும் திசையிலிருந்து மாறாமல், திசை மாற்றத்தினை எதிர்க்கும் பண்பு

அ) விசை ஆ) உந்தம்

இ) திசையில் நிலைமம் ஈ) நியூட்டனின் விதி

17. ஒரு டம்ளர் பாலில் சர்க்கரையை கலக்குவது

அ) விசை ஆ) உந்தம்

இ) திசையில் நிலைமம் **ஈ) இயக்கத்தில் நிலைமம்**

18. தரை விரிப்வினை ஒரு கம்பினால் தட்டி சுத்தம் செய்வது எவ்வகை நிலைமத்திற்கு எடுத்துக்காட்டு?

அ) இயக்க **ஆ) ஓய்வு**

இ) திசையில் ஈ) உந்தம்

19. நிலைமம் என்பது

அ) பொருளின் தன்மை ஆ) விசையின் வகை

இ) ஒரு பொருளின் வேகம் ஈ) ஏதுமில்லை

20. ஓய்வு நிலையிலுள்ள ஒரு கனப் பொருளின் உந்தம்

அ) மிக அதிகம் ஆ) முடிவிலி

இ) சுழி ஈ) சிறியது

21. பேருந்தின் மீது கயிறால் கட்டப்பட்ட பளுவானது இதற்கு எடுத்துக்காட்டு?

அ) இயக்கத்தில் நிலைமம் ஆ) திசையில் நிலைமம்

இ) ஓய்வில் நிலைமம் ஈ) உந்தம்

22. A மற்றும் B என்பன இரு பொருள்கள், அவற்றின் நிறை 100kg மற்றும் 75kg எனில்

அ) இரண்டும் சமமான நிலைமத்தைக் கொண்டிருக்கும்.

ஆ) B க்கு அதிக நிலைமம்

இ) A அதிக நிலைமம் உடையது

ஈ) இரண்டிற்கும் நிலைமம் குறைவு

23. நிலைமத்திற்கான இயற்வியல் அளவு

அ) அடர்த்தி ஆ) எடை

இ) விசை **ஈ) நிறை**

24. ஒரு கத்தியை கூர் செய்யும் போது சாணை பிடிக்கும் கருவியின் சக்கரத்தின் விளிம்பிற்கு தொடு புள்ளியில் உண்டாகும் பொறிகள் இதற்கு எடுத்துக்காட்டு

அ) ஓய்வில் நிலைமம் ஆ) இயக்கத்தில் நிலைமம்

இ) திசையில் நிலைமம் ஈ) செலுத்தப்பட்ட விசை

25. விசையினை வரையறுக்கும் விதி

அ) நியூட்டனின் முதல்விதி ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி

இ) நியூட்டனின் மூன்றாம்விதி ஈ) ஈர்ப்பியல் விதி

26. விசையின் SI அலகு

அ) ஆற்றல் ஆ) ஜீல்

இ) நியூட்டன் ஈ) டைன்

27. ஒரு பொருள்களுக்கிடையேயான நேரடி தொடுதலால் செலுத்தப்படும் விசை

அ) தொடு விசை ஆ) தொடா விசை

இ) சமன் செய்யப்பட்ட விசை ஈ) சமன் செய்யப்படாத விசை

28. ஈர்ப்பு, காந்த மற்றும் மின் காந்த விசைகள் இவ்விசைக்கு எடுத்துக்காட்டுகள்

அ) தொடு விசை **ஆ) தொடா விசை**

இ) சமன் செய்யப்பட்ட விசை ஈ) சீரற்ற விசை

29. ஒரு கதவினை திறத்தல் இதற்கான எடுத்துக்காட்டு

அ) ஒரு தொடர் விசை **ஆ) தொடு விசை**

இ) சமன் செய்யப்பட்ட விசை ஈ) சமன் செய்யப்படாத விசை

30. ஒரு பொருளின் முடுக்கம் இதனால் ஏற்படுகிறது

அ) சமன் செய்யப்பட்ட விசை **ஆ) சமன் செய்யப்படாத விசை**

இ) சமநிலை ஈ) இரட்டை

31. ஒரு விசையின் சுழற்சி அல்லது திருப்புதல் விளைவு

அ) உந்தம் **ஆ) திருப்பு விசை**

இ) இரட்டை ஈ) ஏதுமில்லை

32. சமமான அல்லது சமமற்ற விசைகள் ஒரே திசையில் ஒரு பொருள் மீது இணையாகச் செயல்பட்டால் அவை

அ) ஒத்த இணைவிசைகள் ஆ) தொகுபயன் விசை

இ) மாறுபட்ட இணைவிசைகள் ஈ) எதிர்சமன்

33. சமமான அல்லது சமமற்ற விசைகள் எதிர் எதிர் திசையில் ஒரு பொருள் மீது இணையாகச் செயல்பட்டால் அவை?

அ) தொகுபயன் விசை ஆ) ஒத்த இணைவிசைகள்

இ) மாறுபட்ட இணைவிசைகள் ஈ) ஏதுமில்லை

34. இயக்கத்திற்கான நியூட்டனின் இரண்டாம் விதிக்கான வாய்பாடு

அ) விசை = நிறை x முடுக்கம் ஆ) திசைவேகம் = முடுக்கம் x காலம்

இ) உந்தம் = நிறை x திசைவேகம் ஈ) வேகம் = தொலைவு x நேரம்

35. ஒரு பொருளின் முடுக்கம் அதிகரிக்கும் போது அதன் நிகர விசையும் அதிகரிப்பது இதைச் சார்ந்தது.

அ) பருமன் **ஆ) நிறை**

இ) வடிவம் ஈ) அடர்த்தி

36. ஒரு பனி சறுக்கு விளையாட்டு வீரர் தனது கால் தசைகளால் கடினமாக உந்தித்தள்ளி வேகமாக நகரத் தொடங்குகிறார். இது

அ) நியூட்டனின் முதல்விதி **ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி**

இ) நியூட்டனின் மூன்றாம்விதி ஈ) அழிவின்மை விதி

37. ஒரு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது திடீரென ஒரு பெரிய பாறை மீது மோதுகிறது. வண்டியின் இயக்கம் நிறுத்தப்பட்டு ஓட்டுபவர் தூக்கி எறியப்படுவார். இது

அ) நியூட்டனின் முதல்விதி ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி

இ) நியூட்டனின் மூன்றாம்விதி ஈ) உந்தமாறா விதி

38. ஒரு படகை துடுப்பின் மூலம் செலுத்தும் போது படகு முன்னே செல்வது

அ) நியூட்டனின் முதல் விதி ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி

இ) நியூட்டனின் மூன்றாம் விதி ஈ) உந்தமாறா விதி

39. பொருள் சமநிலையில் உள்ளதெனில் தொகுபயன் விசையின் மதிப்பு

அ) முடிவிலி ஆ) ஒன்று

இ) சுழி ஈ) ஏதுமில்லை

40. இது ஒரு வெக்டர் அளவு

அ) வேகம் **ஆ) உந்தம்**

இ) தொலைவு ஈ) நீளம்

41. கணத்தாக்கின் SI அலகு

அ) Ns M) Ns^2 இ) $kgms^{-2}$ ஈ) kgm^2s^{-2}

42. ஒரு கிகி நிறையுள்ள ஒரு பொருள் மீது செயல்படும் புவியின் ஈர்ப்பு விசை

அ) 8.9N **ஆ) 9.8 N**

இ) 980N ஈ) 1N

43. செயல் அல்லது எதிர்சொல் விசைகளின் தொகுபயன்

அ) சுழியைவிட அதிகம் ஆ) சுழியைவிட குறைவு

இ) சுழி ஈ) ஒன்று

44. உந்த மாறுபாட்டிற்கு சமமான இயற்வியல் அளவு

அ) திசைவேகம் ஆ) முடுக்கம்

இ) விசை **ஈ) கணத்தாக்கு**

45. ஒரு பொருள் முடுக்கமடைகிறது எனில்

அ) அதன் வேகம் எப்போதும் அதிகரிக்கும்

ஆ) ஒரு விசை எப்போதும் அதன் மீது செயல்படும்

இ) அதன் திசைவேகம் எப்போதும் அதிகரிக்கும்

ஈ) திசைவேகம் எப்போதும் குறையும்

46. 10kg நிறையுள்ள ஒரு பொருள் மீது செயல்படும் விசை 20N எனில் அதனால் உண்டாகும் முடுக்கம்

அ) $1ms^{-2}$ **ஆ) $2ms^{-2}$** இ) $20ms^{-2}$ ஈ) $10ms^{-2}$

47. கணத்தாக்கு =

அ) ma **ஆ) Ft** இ) mv ஈ) $\frac{v-u}{t}$

48. உந்த மாறுபாட்டு வீதத்திற்கு சமமான இயற்பியல் அளவு

அ) இடப்பெயர்ச்சி ஆ) முடுக்கம்

இ) விசை ஈ) கணத்தாக்கு

49. புவியீர்ப்பு முடுக்கம் 'g' ன் மதிப்பு

அ) புவியின் பரப்பிற்கு மேலே செல்லச் செல்ல உயரும்

ஆ) புவியின்அடி ஆழத்திற்கு செல்லச் செல்ல அதிகமாகும்.

இ) புவியின் மையத்தில் சுழியாகும்

ஈ) துருவப்பகுதியில் குறைவு நிலநடுக் கோட்டுப் பகுதியில் ஆதிகம்.

50. ராக்கெம் வேலை செய்யும் தத்துவம்

அ) நிறைமாறா கொள்கை ஆ) ஆற்றல்மாறாக் கொள்கை

இ) உந்தமாறாக் கொள்கை ஈ) திசைமாறாக் கோட்பாடு

51. 1கிகி நிறையுள்ள ஒரு பொருள் புவியால் கவரப்படும் விசை

அ) 9.8 N ஆ) 6.67×10^{11} இ) 1N ஈ) $9.8 ms^{-1}$

52. நியூட்டனின் மூன்றாம் இயக்க விதிப்படி வினையும், எதிர்வினையும்

அ) ஒரே பொருளின் மீது எப்போதும் செயல்படும்

ஆ) ஒத்த அளவும், திசையும் உடையது

இ) எப்போதும் எதிர் திசைகளில் செயல்படும்

ஈ) இருபொருள்களின் மீது ஒன்றுக்கொன்று செங்குத்தாக செயல்படும்

53. நீர் நிரம்பிய ஒரு லாரியில் $\frac{2}{3}$ அளவு உயரத்திற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. அது ஒரு சீரான வேகத்துடன் செல்லும் போது திடீரென தடை (break) செலுத்தப்படுகிறது எனில் தண்ணீர்

அ) பின்னோக்கி நகரும் ஆ) பாதிப்பு ஏதும் இருக்காது

இ) சுழல் ஏற்படும் **ஈ) முன்னோக்கி நகரும்**

54. ஒரு முடுக்குவிக்கப்பட்ட இயக்கத்தில் நேர்க்கோட்டு பாதையில் இயங்கும் ஒரு பொருளுக்கு பின்வரும் கூற்றில் எது பொருந்தாது?

அ) அதன் வேகம் மாறிக்கொண்டே இருக்கும்

ஆ) அதன் திசைவேகம் எப்போதும் மாறும்

இ) எப்போதும் புவியிலிருந்து வெளியே செல்லும்

ஈ) ஒரு விசை எப்போதும் அதன் மீது செயல்படும்

55. பந்து உயரே எறியப்படும் போது 'g' – ன் மதிப்பு

அ) சுழி ஆ) நேர் (+)

இ) எதிர் (-) ஈ) புறக்கணிக்கத்தக்கது

56. இரு பொருட்களுக்கிடையேயான தொலைவு வழக்கமான தொலைவைவிட மடங்கு அதிகமானால், விசையானது .... ஆகும்.

அ) 36 மடங்கு ஆ) 6 மடங்கு

இ) 12 மடங்கு **ஈ) $\frac{1}{36}$மடங்கு**

57. இரு பொருட்களின் நிறைகளும் பாதியாக குறைக்கப்படும் போது அவற்றின் இடையிலுள்ள தூரத்தில் எந்த மாற்றமும் இல்லை எனில், அதற்கிடையேயான ஈர்ப்பு விசை

அ) $\frac{f}{4}$ ஆ) $\frac{f}{2}$ இ) f ஈ) 2f

58. நியூட்டனின் ஈர்ப்பியல் விதி இதற்குப் பொருந்தும்

அ) சிறிய பொருட்களுக்கு மட்டும்

ஆ) தாவரங்களுக்கு மட்டும்

இ) வடிவத்தைப் பொருத்து அல்லாமல் அனைத்துப் பொருட்களுக்கும்

ஈ) சூரிய குடும்பத்திற்கு மட்டும்

59. உயர் விலைமதிப்புடைய பொருட்களின் நிறை 'w' உடைய ஒரு பெட்டியை ஒரு திருடன் திருடிக்கொண்டு h என்ற உயரம் உடைய சுவரிலிருந்து கீழே குதிக்கிறான். தரையை அடைவதற்கு முன் அவன் உணரும் பளு

அ) $\frac{w}{2}$ **ஆ) சுழி** இ) w ஈ) 2w

60. புவியின் நிறையில் மாற்றம் இல்லாமல் அதன் ஆரம் 1 விழுக்காடு சுருங்கும்போது புவியின் பரப்பின் மீதான ஈர்ப்பு முடுக்கம்

அ) குறையும் ஆ) மாற்றம் அடைவதில்லை

இ) அதிகரிக்கும் ஈ) ஏதுமில்லை

61. பின்வரும் எந்த அளவு புவியின் மையத்தில் சுழி

அ) நிறை **ஆ) எடை**

இ) இரண்டும் ஈ) ஏதுமில்லை

62. பொது ஈர்ப்பு மாறிலியின் மதிப்பு

அ) 6.743×10^{-11} Nm^2kg^{-1} **ஆ) 6.743×10^{-11} Nm^2kg^{-1}**

இ) 6.743×10^{-11} Nm^2kg^{-1} ஈ) 6.743×10^{-11} Nm^2kg^{-1}

63. எடையின் அளவு குறிப்பிடப்படும் அலகு

அ) இடப்பெயர்ச்சி ஆ) நிறை (கிகி)

இ) விசை (நியூட்டன்) ஈ) ஏதுமில்லை

64. புவியைச் சுற்றி வரும் ஒரு துணைக்கோளில் ஒரு பொருளின் எடை

அ) சுழி ஆ) உண்மை எடை

இ) உண்மை எடையை விட குறைவு ஈ) உண்மை எடையை விட அதிகம்

65. புவியை நோக்கிப் பொருள்கள் விழும் இயக்கம்

அ) புவிஈர்ப்பு சுழற்சி ஆ) எடையற்ற நிறை

இ) புவி ஈர்ப்பு முடுக்கம் **ஈ) புவி ஈர்ப்பு விசை**

66. அண்டத்தில் இரு பொட்களுக்கிடையேயான ஈர்ப்பு விசை இதனை சார்ந்து இருக்காது

அ) அவற்றிக்கிடையேயான தொலைவு

ஆ) அவற்றின் நிறைகளின் பெருக்கற்பலன்

இ) அவற்றின் நிறைகளின் கூடுதல்

ஈ) ஈர்ப்பு மாறிலி

67. ஒரு பொருள் புவியின் பரப்பிலிருந்து தடையின்றி கீழே விழும் போது அதன் முடுக்கம்

அ) 9.4 ms^{-2} ஆ) 9.1 ms^{-2}

இ) 9.8 ms^{-2} ஈ) 9.6 ms^{-2}

68. புவி ஈர்ப்பு முடுக்கம் புவியில் பின்வருவனவற்றுள் எதனுடன் மாறும்?

அ) தொலைவு ஆ) உயரம்

இ) ஒரு பொருளின் நிறை **ஈ) அனைத்தும்**

69. நிறை 1000kg உடைய ஒரு மின்தூக்கி 1ms^{-2} முடுக்கத்துடன் மேல் நோக்கிய திசையில் இயங்குகிறது. அதனுடன் இணைக்கப்பட்ட கம்பியில் உருவாகும் நீட்சி

அ) 10,000N ஆ) 10,800N

இ) 9,800N **ஈ) 11,000N**

70. ஒரு மின்தூக்கி மேல் நோக்கிய திசையில் முடுக்கப்படும்போது ஒரு பொருளின் தோற்ற எடை

அ) உண்மை எடையை விட அதிகம் ஆ) உண்மை எடைக்கு சமம்

இ) உண்மை எடையை விட குறைவு ஈ) உண்மை எடைக்கு சமமல்ல

71. வெட்டும் கருவிகள் கூரிய முனை உடையவை ஏனெனில்

அ) தொடும் பரப்பு அதிகம் ஆ) அழுத்தம் குறையும்

இ) பரப்பு குறையும் அழுத்தம் அதிகரிக்கும் ஈ) பரப்பு அதிகரித்து அழுத்தம் அதிகரிக்கும்

72. புவியிலிருந்து திடீரென ஈர்ப்புவிசை மறையுமானால் நிகழ்வது

அ) எல்லாப் பொருட்களும் ஒரு விரைவு இறக்கைச் சுழற்சியில் இயங்கம்.

ஆ) எல்லாப் பொருட்களும் மிதக்கும்

இ) சாத்தியமல்ல

ஈ) கூற இயலாது

2. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. இடப்பெயர்ச்சி நிகழ்வதற்கு **விசை** தேவை

2. நகர்ந்து கொண்டு உள்ள ஊர்தியில் திடீர் தடை ஏற்பட்டால், பயணியர் முன் நோக்கி சாய்கின்றனர். இந்நிகழ்வு **இயக்கத்தில் நிலைமம்** மூலம் விளக்கப்படுகிறது.
3. மரபுரீதியாக வலஞ்சுழி திருப்புத்திறன் **எதிர்** குறியிலும் இடஞ்சுழித் திருப்புத்திறன் **நேர்** குறியிலும் குறிக்கப்படுகிறது.
4. மகிழுந்தின் வேகத்தினை மாற்ற **பற்சக்கரம்** பயன்படுகிறது.
5. 100 கி.கி நிறையுடைய மனிதனின் எடை புவிப்பரப்பில் **980N** அளவாக இருக்கும்.
6. உந்தம் ஒரு **வெக்டர்** அளவு
7. ஒரு பொருளின் முடுக்கம் ஏற்படுவது **சமன் செய்யப்படாத விசையினால்**
8. **இயக்கவியல்** என்பது இயக்கத்தை ஏற்படுத்தும் விசையினைக் கருத்தில் கொள்ளாமல் இயக்கத்தினை மட்டுமே விளக்குவது.
9. பொருளின் இயக்கத்தையும், அதற்கு காரணமான **விசை** பற்றியும் விளக்குவது இயக்கவிசையியல் ஆகும்.
10. அரிஸ்டாட்டில் கூற்றுப்படி, இயக்குகின்ற பொருள்கள் யாவற்றையும், ஓய்வு நிலைக்குக் கொண்டுவர புறவிசை எதுவும் தேவையில்லை. இது **இயற்கையான இயக்கம்** எனப்படும்.
11. இயங்கும் பொருட்களை ஓய்வு நிலைக்குக் கொண்டுவர புறவிசை தேவைப்படும் எனில் அவ்வகை இயக்கம் **இயற்கைக்கு மாறான இயக்கம்** எனப்படும்.
12. வெவ்வெறு நிறையுடைய இரு பொருட்கள் கீழே போடப்படும்போது, முதலில் **கனமானது** வேகமாக கீழே விழும்.
13. ஒரு பொருள் தனது நிலையை மாற்றும் எனில் அது **இயக்கத்தில் உள்ளது** எனப்படும்.
14. தனது இயக்கநிலையை எதிர்க்கும் தன்மை **நிலைமம்**
15. ஒரு இயங்கும் பொருளின் நிறையையும், திசைசேத்தையும் பெருக்கக் கிடைப்பது **உந்தம்**
16. ஓடும் மகிழுந்து வளை பாதையில் செல்லும்போது பயணியர் ஒரு பக்கமாக சாயக் காரணம் **திசைக்கான நிலைமம்**
17. வெவ்வேறு அளவு, அமைப்பு மற்றும் நிறையுடைய பொருள்கள் ஒரு உயரத்திலிருந்து விழும்போது **வெற்றிடத்தில்** தரையை ஒரே சமயத்தில் வந்தடையும்.
18. 1N விசையானது 1கிகி நிறையின் மீது செயல்படும் போது அது நகருமானால் அதன் முடுக்கம் **$1ms^{-1}$**
19. தடகள வீரர் நீளம் தாண்டுதலில் திடீரென குதிப்பதைவிட ஒரு தொலைவிலிருந்து ஓடிவரும் நிலைமத்தின் வகை **இயக்கத்தில் நிலைமம்**
20. ஒரு குறிப்பிட்ட கால அளவில் பொருள் தனது நிலையை மாற்றா தன்மை **ஓய்வு**
21. ஒரு பொருள் முடுக்கமடைந்துள்ளது எனில் **ஒரு விசை எப்போதும் அதன் மீது செயல்படும்**
22. தொடா விசை என்பது **புல விசை**
23. ஒரு பந்தினை உதைத்தல் **தொடு** விசை
24. சமன்பட்ட விசையில் தொகுபயன் விசை **சுழி**
25. ஒரு பொருள் மீது பல்வேறு விசைகள் செயல்படும் போது அவற்றின் மொத்த விளைவை ஏற்படுத்தும் ஒரு தனித்த விசை **தொகுபயன் விசை**
26. தொகுபயன் விசைக்கு சமமான ஆனால் எதிர் திசையில் செயல்படும் ஒரு விசை **எதிர் சமனி**

27. இரு இணைவிசைகள் ஒரே திசையில் செயல்பட்டால் அவை **ஒத்த இணைவிசைகள்**
28. திருப்பு விசை ஒரு **வெக்டர்** அளவு.
29. திருப்பு விசையின் அலகு **Nm**
30. இரு சமமான இணைவிசைகள் ஒரே நேரத்தில் ஒரு பொருளின் இரு வேறு புள்ளிகளின் மீது எதிர் எதிர் திசையில் செயல்பட்டால், அவை **இரட்டை** விசைகள் எனப்படும்.
31. திருப்புத்திறனின் திசை பொருட்களின் சுழற்சி வலஞ்சுழியாக இருப்பின் **எதிர்க்குறி**
32. திருகின் சுழற்சி **இரட்டை**க்கு எடுத்துக்காட்டு
33. இரட்டையின் திருப்புத்திறன் என்பது **விசையின் எண் மதிப்பு**க்கும், இணைவிசைகளுக்கு இடையேயான செங்குத்துத் தொலைவு.
34. திருப்புக் சக்கரம் என்பது **விசையின் திருப்புத்திறன்** பயன்பாடு
35. **பற் சக்கரங்கள்** மூலம் வாகன சக்கரங்களின் சுழற்சி வேகத்தை மாற்றலாம்.
36. ஒரு பொருளின் மீது செயல்படும் மொத்த வலஞ்சுழிதிருப்புத் திறனும், மொத்த இடஞ்சுழி திருப்புத் திறனும் **சமம்**
37. 1kgf = **9.8N**
38. 1N = **1kg ms^{-2}**
39. நிறை மற்றும் திசைவேகத்தின் பெருக்கற்பலன் **உந்தம்** எனப்படும்.
40. ஒரு பொருளின் நிறை 50kg, 100N விசையுடன் ஓடுகிறது எனில் அதன் முடுக்கம் **2ms^{-2}**
[குறிப்பு: F=ma, $a=\frac{F}{m}=\frac{100}{50}=2ms^2$]
41. ஓய்வு நிலையிலுள்ள பெரும் பொருளின் உந்தம் **சுழி**
42. நிறை என்பது **பருப் பொருளின்** அளவு
43. எடை என்பது ஒரு பொருளின் மீதான **புவி ஈர்ப்பு விசை**
44. எடையின் அலகு **நியூட்டன்**
45. நிறையின் அலகு **கிலோகிராம்**
46. விசைக்கும், நிலைமத்திற்குமான தொடர்புடைய நிறை **நிறை நிலைமம்**
47. ஈர்ப்பு விசை எதிர்தகவில் **நிறைகளுக்கிடையேயான தொலைவின் இருமடிக்கு** தொடர்புடையது.
48. ஈர்ப்பு விசையினால் பொருளின் எடை அடைவது **தோற்ற எடை**
49. புவி ஈர்ப்பினால் ஒரு நபர் தடையின்றி விழும் போது அவருடைய எடை **சுழி**
50. ஒரு மின் தூக்கியில் மேல் நோக்கி செல்லும் போது ஒரு பொருளின் தோற்ற எடை **உயரும்**
51. தடையின்றி விழும் அனைத்தும் **எடையின்மை** ஆகத் தோன்றும்
52. மின்தூக்கியில் திசைவேகம் மாறும்போது உண்மை எடையிலிருந்து தோற்ற எடை **மாறுபடும்**
53. புவியில் 1kg நிறையுள்ள ஒரு பொருளின் எடை **9.8 N**
54. நிறையானது ஈர்ப்பு விசையுடன் தொடர்புடையது எனில் அது **ஈர்ப்பு நிறை**
55. விண்வெளி வீரர்கள் மிதப்பதில்லை, ஆனால் தடையின்றி விழுவதன் காரணம் **சுற்றுப்பாதையின் திசைவேகம்**
56. செயற்கைக் கோளானது அதன் சுற்றுப் பாதையில் அமையக் காரணமான விசை **புவி ஈர்ப்பு விசை**
57. வானியல் பொருட்களின் பரிரமாணங்களைக் கண்டறிய உதவும் விதி **ஈர்ப்பு விதி**

3. சரியான தவறா?

1. துகள் அமைப்பில் ஏற்படும் நேர்க்கோட்டு வந்தம் எப்போதும் மாறிலியாகும்.

விடை: தவறு, புறவிசை செயல்படாத போது ஒரு அமைப்பின் நேர்க்கோட்டு உந்தம் மாறிலியாக இருக்கும்.

2. பொருளொன்றின் தோற்ற எடை எப்போதும் அதன் உண்மையான எடைக்கு சமமாக இருக்கும்.

விடை: தவறு, பொருளொன்றின் நகர்விற்கேற்ப தோற்ற எடையும், உண்மையான தோற்ற எடையும் அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கும்.

3. பொருட்களின் எடை நில நடுக்கோட்டுப்பகுதியில் பெருமமாகவும், துருவப்பகுதியில் குறைவாகவும் இருக்கும்

விடை: தவறு, பொருட்களின் எடை நில நடுக்கோட்டுப் பகுதியில் குறைவாகவும், துருவப் பகுதியில் பெருமமாகவும் இருக்கும்.

4. திருகுமறை (Screw) ஒன்றினை நீளமான கைப்பிடி உள்ள திருகுக் குறடு (Spanner) வைத்து திருகுதல், நீளமான கைப்பிடி கொண்ட திருகுக்குறடினை வைத்துத் திருகுதலை விட எளிதானதாகும்.

விடை: தவறு, திருகுமறை (Screw) ஒன்றினை நீளமான கைப்பிடி உள்ள திருகுக் குறடு (Spanner) வைத்து திருகுதல், குறைந்த கைப்பிடி கொண்ட திருகுக் குறடினை வைத்துக் திருகுதலை விட எளிதானதாகும்.

5. புவியினை சுற்றி வரும் விண்வெளி மையத்தில் உள்ள விண்வெளி வீரர் புவிஈர்ப்பு விசை இல்லாததால் எடையிழப்பை உணர்கிறார்.

விடை: தவறு, புவியினை சுற்றி வரும் விண்வெளி மையத்தில் உள்ள விண்வெளி வீரரின் புவி ஈர்ப்பு முடுக்கம், விண்கல முடுக்கத்திற்கு சமமாக இருப்பதால் எடையிழப்பை உணர்கிறார்.

6. துப்பாக்கி சுடுதலில் பின்னோக்கி நகர்வில் நேர்க்கோட்டு உந்தமும், இயக்க ஆற்றலும் மாறாதது.

விடை: தவறு, நேர்க்கோட்டு உந்தம் மாறாது. ஆனால் இயக்க ஆற்றல் அதிகரிக்கும்.

7. அதிகமான விசை நீண்ட காலத்திற்கு செலுத்தப்படும் போது நேர்க்கோட்டு உந்தமாறுபாடு ஏற்படுகிறது.

விடை: தவறு, அதிகமான விசை நீண்ட காலத்திற்கு செலுத்தப்படும்போது நேர்க்கோட்டு உந்தமாறுபாடு ஏற்படுகிறது.

8. புவி ஈர்ப்பில் தடையின்றி கீழே விழும் ஒரு பொருள் எடையில்லாததாக தோன்றும்.

விடை: சரி

9. MKS மற்றும் CGS-க்கான தொடர்பில் விசையின் தனிநிலை அலகு 1N = 10^5 டைன்

விடை: சரி

10. நியூட்டனின் முதல் விதி விசை மற்றும் நிலைமத்தை வரையறுக்கிறது.

விடை: சரி

11. கலிலியோவின் கூற்றுப்படி "ஒரு பொருளை சீரான இயக்கத்தில் வைக்க ஒரு புற விசை தேவை".

விடை: தவறு, இது அரிஸ்டாட்டில் கூற்று

12. வினையும், எதிர்வினையும் வெவ்வேற பொருள்களில் செயல்படும்போது ஒன்றையொன்று அழிப்பதில்லை.

விடை: சரி

13. புவியின் மையத்தில் 'g' ன் மதிப்பு சுழி

விடை: சரி

14. 1kgf = 980 டைன்

விடை: தவறு, 1kgf = 9.8N

15. புவி ஈர்ப்பு முடுக்கத்தினை g=$\frac{Gm}{R2}$ எனவும் எழுதலாம்

விடை: சரி

16. நியூட்டனின் ஈர்ப்பு விதி புதிய நட்சத்திரங்களையும், கோள்களையும் கண்டறிய உதவுகிறது.

விடை: சரி

17. வெவ்வேறு நிறைகளுடைய இரு பொருள்கள் ஒரே உயரத்தில் இருந்து தடையின்றி கீழே விழும்போது இரண்டும் சேர்ந்து புவியை அடைகின்றன.

விடை: தவறு, ஒவ்வொரு பொருளுக்கான காற்றின் தடை சமமாக இருந்தால், இரண்டும் சேர்ந்து புவியை அடைகின்றன.

18. விசை மற்றும் கணத்தாக்கின் அலகும் சமம்

விடை: தவறு, விசையின் அலகு N மற்றும் கணத்தாக்கின் அலகு Ns

19. மின்தூக்கியானது மேல் நோக்கி முடுக்கப்படும்போது உள்ள இருக்கும் நபரின் தோற்ற எடை அதிகரிக்கும்.

விடை: சரி

20. புவியின் ஈர்ப்பு விசையிலிருந்து விடுபடத் தேவையான திசைவேகம், மாறுபடு திசைவேகம் எனப்படும்.

விடை: தவறு, புவியின் ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டுச் செல்ல தேவையான திசைவேகம், விடுபடு திசைவேகம் எனப்படும்.

4. பொருத்துக

1. பொருத்துக

பகுதி – I		பகுதி – II
1. நியூட்டனின் முதல் விதி	-	அ. ராக்கெட் ஏவுதலில் பயன்படுகிறது
2. நியூட்டனின் இரண்டாம் விதி	-	ஆ) பொருட்களின் சமநிலை
3. நியூட்டனின் மூன்றாம் விதி	-	இ) விசையின் விதி
4. நேர்க்கோட்டு உந்த அழிவின்மை விதி	-	ஈ) பறவை பறத்தலில் பயன்படுகிறது

விடை: 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 - அ

2. பொருத்துக

1. நியூட்டனின் மூன்றாம் விதி	-	அ) GM $\frac{m}{R^2}$
2. திருப்பு விசை	-	ஆ) F_B = -F_A
3. ஈர்ப்பு விசை	-	இ) வலஞ்சுழி திருப்புத்திறன் = இடஞ்சுழி திருப்புத்திறன்
4. திருப்புத்திறன்களின் தத்துவம்	-	ஈ) சுழற்சி விசை

விடை: 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ

3. பொருத்துக

1. நிலையியல்	-	அ) இயக்க நிலையிலுள்ள பொருள் மீது ஏற்படும் விளைவு
2. இயங்கியல்	-	ஆ) ஓய்வு நிலையிலுள்ள பொருள் மீது ஏற்படும் விளைவு
3. இயக்க விசையியல்	-	இ) இயக்கத்தினை ஏற்படுத்தும் விசை கருத்தில் கொள்ளப்படாது
4. இயக்கவியல்	-	ஈ) இயக்கத்திற்கு காரணமாக விசை பற்றி விளக்குவது.

விடை: 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 - இ

4. பொருத்துக

1. இயற்கையான இயக்கம் - அ) இழுத்தல் அல்லது தள்ளுதல்
2. இயற்கைக்கு மாறான இயக்கம் - ஆ) விசை சார்பற்ற இயக்கம்
3. நிலைமம் - இ) விசை சார்பற்ற இயக்கம்
4. விசை - ஈ) நிலையை மாற்றுவதை எதிர்க்கும் தன்மை

விடை: 1 – இ, 2 – ஆ, 3 – ஈ, 4 - அ

5. பொருத்துக

1. கயிறு இழுத்தல் - அ) விசையின் சுழல் விளைவு
2. கதவுகளின் கைப்பிடி - ஆ) விசை சார்பற்ற இயக்கம்
3. நெம்பு கோலில் செயல்படும் விசை - இ) சமமற்ற இணை விசைகள்
4. தொகுபயன் விசை சுழி - ஈ) சமன் செய்யப்படாத விசைகள்

விடை: 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 - ஆ

6. பொருத்துக

1. திருப்பு விசை - அ) விசையின் திருப்புத்திறன்
2. இரட்டை - ஆ) 980 டைன்
3. 1 கி விசை - இ) திருப்புத்திறனின் தத்துவம்
4. $F_1 \times d_1 = F_2 \times D_2$ - ஈ) இரு சமமான மாறுபட்ட இணை விசைகள்

விடை: 1 – அ, 2 – ஈ, 3 – ஆ, 4 - இ

7. பொருத்துக

அளவு		**அலகு**
1. புவி ஈர்ப்பு முடுக்கம்	-	அ) Nm^2kg^{-2}
2. நிறை	-	ஆ) N
3. பொது ஈர்ப்பு மாறிலி	-	இ) $N\ kg^{-1}$
4. எடை	-	ஈ) kg

விடை: 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ

8. பொருத்துக

1. a=g என்ற மதிப்புடன் பொருள் கீழே விழும்போது - அ) தோற்ற எடை அதிகரிப்பு
2. a=0 என்ற மதிப்பில் பொருள் கீழ்நோக்கி இயங்கம்போது – ஆ) தோற்ற எடையின் மதிப்பு சுழி
3. a≠g என்ற மதிப்பு டன் கீழ் நோக்கி இயங்கினால் - இ) தோற்ற எடையில் ஏற்றமுமில்லை, இறக்கமுமில்லை
4. a≠g என்ற மதிப்புடன் மேல் நோக்கி நகரும்போது – ஈ) தோற்ற எடை இழப்பு

விடை: 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 – அ

9. பொருத்துக

1. m x a - அ) உந்த விசை
2. m x v - ஆ) புவி ஈர்ப்பு முடுக்கம்
3. f x t - இ) விசை

4. W/m - ஈ) இயக்கத்தின் அளவு

விடை: 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 – ஆ

10. பொருத்துக

1. ஐன்ஸ்டீன் - அ) இயக்க விதிகள்
2. நியூட்டன் - ஆ) விசை – நிலைமம் இயக்கம் இவற்றின் விளக்கம்
3. அரிஸ்டாட்டில் - இ) இயங்கும் பொருளின் இயல்பான ஓய்வு நிலை
4. கலிலயோ - ஈ) புவி ஈர்ப்பு முடுக்கம் சமம்

விடை: 1 – ஈ, 2 – அ, 3 – இ, 4 – ஆ

5. சரியான கூற்றினைத் தேர்வு செய்க

அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை

இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது. எனினும் காரணம் சரி

1. **கூற்று:** வலஞ்சுழி திருப்புத்திறன்களின் மொத்த மதிப்பு, இடஞ்சுழி திருப்புத்திறன்களின் மொத்த மதிப்பிற்கு சமமானதாக இருக்கும்.

   காரணம்: உந்த அழிவின்மை விதி என்பது புறவிசை மதிப்பு சுழியாக உள்ளபோது மட்டுமே சரியானதாக இருக்கும்.

   விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை

2. கூற்று: 'g' ன் மதிப்பு புவிப்பரப்பில் இருந்து உயர செல்லவும் புவிப்பரப்பிற்கு கீழே செல்லவும் குறையும்.

   காரணம்: 'g' மதிப்பானது புவிப்பரப்பில் பொருளின் நிறையினைச் சார்ந்து அமைகிறது.

   விடை: இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறு

3. கூற்று: சுற்றியுள்ள காற்றை பின்னோக்கித் தள்ளி ஒரு ராக்கெட் முன்னேறிச் செல்கிறது.

   காரணம்: ராக்கெட்டின் வால் பகுதியில் இருந்து வெளியேறும் வெப்ப வாயுக்கள் மிக அதிக உந்தத்தை உருவாக்குகின்றன. இதை சமன்செய்ய, அதற்கு சமமான எதிர் உந்துவிசை எரிகூடத்தில் உருவாகி, ராக்கெட் மிகுந்த வேகத்துடன் முன்னோக்கி பாய்கிறது.

   விடை: ஈ) கூற்று தவறானது. எனினும் காரணம் சரி

4. கூற்று: சீரான திசைவேகத்தில் நகரும் பொருளினை தொடர்ந்து நகர்த்த புறவிசை ஏதும் தேவையில்லை

   காரணம்: ஏனெனில் F=ma=m(0)=0

   விடை: அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

5. கூற்று: 1கிகி நிறையுள்ள பொருளொன்றை 1 மீவி-2 அளவிற்கு முடுக்குவிக்க தேவைப்படும் விசையின் அளவு ஒரு நியூட்டன் 1N

   காரணம்: a = $\frac{F}{m}$

   விடை: அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

6. கூற்று: ஒரு பொருளின் மீதான தொகுபயன் விசை சுழி

   காரணம்: பொருளானது சீரற்ற இயக்கத்தில் நேர்க்கோட்டில் இயங்கும்.

   விடை: இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறு

7. கூற்று: செயல் மற்றும் எதிர் செயல் விசைகள் ஒன்றையொன்று சமன் செய்யும்
காரணம்: இருவிசைகளும் எப்பொழுதும் வெவ்வேறு பொருள்களில் செயல்படும்.
விடை: இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறு
8. கூற்று: ஈர்ப்பியல் மாறிலி (G), புவி ஈர்ப்பு முடுக்கத்திற்கு (g) சமம்
காரணம்: மேற்கண்டவை இரண்டும் வெவ்வேறு அலகுகள் கொண்டவை.
விடை: ஈ) கூற்று தவறானது. எனினும் காரணம் சரி
9. கூற்று: புவி ஈர்ப்பு முடுக்கத்தின் மதிப்பு ஒரு நிறையுள்ள பொருளின் மீது செலுத்தப்படும் விசையை சார்ந்ததல்ல.
காரணம்: புவியின் அடி ஆழத்திற்கு செல்ல செல்ல 'g' ன் மதிப்பு குறைகிறது.
விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை
10. கூற்று: மின்தூக்கியில் ஒரு ஊசல் தொங்கவிடப்பட்டால் காலம் முடிவிலியாகும்.
காரணம்: ஏனெனில், தடையின்றி விழும் பொருளுக்கான முடுக்கம், புவிஈர்ப்பு முடுக்கத்திற்கு சமம்.
விடை: அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
11. கூற்று: புவி சுற்றுவது திடீரென நின்றுவிடுமானால் 'g' ன் மதிப்பு எல்லா இடங்களிலும் சமமாக இருக்கும்.
காரணம்: 'g' இரு பொருள்களுக்கிடையேயான தொலைவினைப் பொருத்தது
விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை
12. கூற்று: பொருளின் நிறைக்கும், ஈர்ப்பு விசைக்குமான விகிதம் ஒன்று
காரணம்: ஏனெனில் பொருளின் முடுக்கம், புவி ஈர்ப்பு முடுக்கத்திற்கு சமம்.
விடை: அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
13. கூற்று: ஒத்த அளவுடைய இணைவிசைகள் அவை ஒரு பொருளின் மீது ஒரே மாதிரியாக செயல்படும் போது இடம் பெயர்வு அல்லது சுழற்சி இயக்கத்தை ஏற்படுத்தும்.
காரணம்: பொருளின் மீது ஒரே திசையில் செயல்படும் விசையால் இடம் பெயர்வும் பொருளின் தொடு கோட்டில் செயல்படும் விசையினால் சுழற்சி இயக்கமும் ஏற்படும்.
விடை: அ) கூற்றும் காரணமும் சரியாக பொருந்துகிறது மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

2. ஒளியியல்

1. A, B, C, D என்ற நான்கு பொருள்கள் ஒளி விலகல் எண்கள் முறையே 1.31, 1.43, 1.33, 2.4 எனில், இவற்றில் ஒளியின் திசைவேகம் பெருமமாக உள்ள பொருள் எது?
அ) A ஆ) B இ) C ஈ) D
2. பொருளின் அளவிற்கு சமமான, தலைகீழான மெய்ப் பிம்பம் கிடைக்க பொருள் வைக்கப்பட வேண்டிய தொலைவு
அ) f ஆ) ஈறிலாத் தொலைவு
இ) 2f ஈ) f க்கும் 2f க்கும் இடையில்
3. மின் விளக்கு ஒன்று குவிலென்சு ஒன்றின் முதன்மைக் குவியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின் விளக்கு ஒளியூட்டப்படும் போது, குவி லென்சானது
அ) விரிக்கும் கற்றைகளை உருவாக்கும் ஆ) குவிக்கும் கற்றைகளை உருவாக்கும்
இ) இணைக் கற்றைகளை உருவாக்கும் ஈ) நிறக் கற்றைகளை உருவாக்கும்

4. குவி லென்சின் உருப்பெருக்கமானது எப்போதும் .... மதிப்புடையது

அ) நேர்க்குறி ஆ) எதிர்க்குறி

இ) நேர்க்குறி (அ) எதிர்க்குறி ஈ) சுழி

5. ஒரு குவி லென்சானது, மிகச்சிறிய மெய் பிம்பத்தை முதன்மைக் குவியத்தில் உருவாக்கினால், பொருள் வைக்கப்பட்ட இடம் ....

அ) முதன்மைக் குவியம் **ஆ) ஈறிலாத் தொலைவு**

இ) 2f ஈ) f க்கும் 2f க்கும் இடையில்

6. ஒரு லென்சின் திறன் 4D எனில் அதன் குவியத் தொலைவு

அ) 4 மீ ஆ) -40மீ **இ) -0.25மீ** ஈ) – 2.5மீ

7. கிட்டப்பார்வை குறைபாடு உடைய கண்ணில், பொருளின் பிம்பமானது .... தோற்றுவிக்கப்படுகிறது.

அ) விழித்திரைக்குப் பின்புறம் ஆ) விழித்திரையின் மீது

இ) விழித்திரைக்கு முன்பாக ஈ) குருட்டுத் தானத்தில்

8. விழி ஏற்பமைத் திறன் குறைபாட்டைச் சரி செய்ய உதவுவது

அ) குவி லென்சு ஆ) குழி லென்சு

இ) குவி ஆடி **ஈ) இரு குவிய லென்சு**

9. சொல் அகராதியில் உள்ள சிறிய எழுத்துகளைப் படிப்பதற்கு உகந்த லென்சு எது?

அ) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குவி லென்சு

ஆ) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு

இ) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குவி லென்சு

ஈ) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு

10. ஒரு முப்பட்டகத்தின் வழியே செல்லும், நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிறங்களின் அலை நீளங்கள் VB, VG, VR எனில் பின்வருவனவற்றுள் எச்சமன்பாடு சரியானது?

அ) $V_B = V_G = V_R$ ஆ) $V_B > V_G > V_R$

இ) $V_B < V_G < V_R$ ஈ) $V_B < V_G > V_R$

11. ஒளியின் பாதை ....

அ) கதிர்கள் ஆ) புள்ளி

இ) வரிகள் ஈ) கற்றை

12. கதிர்களின் தொகுப்பு ....

அ) வரிகள் ஆ) புள்ளிகள்

இ) கற்றை ஈ) ஏதுமில்லை

13. ஒளியின் திசைவேகம்

அ) 3×10^{-8} ms^{-1} **ஆ) 3×10^{8} ms^{-1}**

இ) 3×10^{8} kms^{-1} ஈ) 3×10^{-8} kms^{-1}

14. ஒளியின் திசைவேகம்

அ) $g = c\lambda$ ஆ) $v=\frac{c}{\lambda}$

இ) $c = v\lambda$ **ஈ) ஆ மற்றும் இ இரண்டும்**

15. ஊதா மற்றும் சிவப்பு ஒளியின் அலைநீளங்கள் முறையே ....

அ) குறைந்தது, உயர்ந்தது ஆ) உயர்ந்தது, குறைந்தது

இ) ஒரே அளவு ஈ) ஏதுமில்லை

16. நாம் பொருட்களை காண்பது .... நிகழ்வினால் ஆகும்.

அ) எதிரொளிப்பு ஆ) ஒளிவிலகல்

இ) ஊடுருவல் ஈ) ஒளிச்சிதறல்

17. ஊடகத்தில் ஒளியின் வேகத்தை நிர்ணயிப்பது ....

அ) அடர்த்தி ஆ) அலைநீளம்

இ) ஒளிவிலகல் **ஈ) ஆ மற்றும் இ**

18. ஒளியானது அடர்வுகுறை ஊடகத்திலிருந்து அடர்மிகு ஊடகத்திற்கு செல்லும்போது விலகலடைந்த கதிர் .... நோக்கி விலகிச் செல்லும்.

அ) விலகலடையும் ஆ) வழியே

இ) செங்குத்துக்கோட்டை ஈ) இடைமுகப்பைத் தொட்டு

19. காற்றில் ஒளிவிலகல் எண் ....

அ) 1 ஆ) முடிவிலி

இ) 0 ஈ) ஏதுமில்லை

20. ஒளிக்கதிர் ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்கு செல்லும்போது அது வளைகிறது. இந்நிகழ்வு ....

அ) எதிரொளிப்பு ஆ) நிறப்பிரிகை

அ) ஒளிவிலகல் ஈ) குறுக்கீடு

21. மழைக் காலங்களின் போது நீரின் மீது மெல்லிய எண்ணெய்ப் படலத்தில் பல வண்ணங்கள் தோன்றும். ஏனெனில்

அ) சிதறல் **ஆ) நிறப்பிரிகை**

இ) எதிரொளிப்பு ஈ) ஒளிவிலகல்

22. வானவில் தோற்றம் நீர்த்துளிகளின் .... ஆல் ஏற்படுகிறது.

அ) அயனியாக்கம்

ஆ) சூரியஒளி உட்புகுதல்

இ) சூரியஒளியின் ஒளி எதிரொளித்தல் மற்றும் ஒளிவிலகல்

ஈ) ஏதுமில்லை

23. போக்குவரத்து சைகை விளக்குகள் சிவப்பு வண்ணத்தில் உள்ளது. ஏனெனில் ....

அ) உயர் அலைநீளம் உடையது ஆ) குறைந்த பிரிகையுடையது

இ) அபாயத்தின் குறியீடு **ஈ) அ மற்றும் ஆ இரண்டும்**

24. வானத்தில் ஒரு விண்மீன் போல் தோன்றுவது வளிமண்டலத்தால் உண்டாகும் ....

அ) ஒளிசிதறல் ஆ) ஒளி எதிரொளித்தலால்

இ) ஒளி விலகலால் ஈ) அ மற்றும் ஆ

25. ஒரு ஒளிக்கற்றையானது ஒரு கூழ்மக் கரைசலில் செல்லும்போது ஒளியானது ....

அ) சிதறலடையும் ஆ) எதிரொளிக்கப்படும்

இ) உட்கிரகிக்கப்படும் ஈ) மாற்றமடையாது

26. சிதறல் அடையும் ஒளிக்கற்றையின் தொடக்க மற்றும் இறுதி ஆற்றல்கள் சமமாக இருப்பின் அச்சிதறல் ....

அ) ஒளிக்கதிர் ஆ) மீட்சியற்றது

இ) மீ-ஒளிச்சிதறல் **ஈ) மீட்சி சிதறல்**

27. ஒரு கூழ்மக் கரைசலில் உள்ள கூழ்மத்துகள்களால் ஒளிக்கதிர்கள் சிதறலடிக்கப்படுகின்ற நிகழ்வு ....

அ) மீ – ஒளிச்சிதறல் ஆ) ராமன் விளைவு

இ) ஒளிக்கதிர் **ஈ) டிண்டால் விளைவு**

28. ஒளிக்கதிரின் அலைநீளம் மற்றும் அதிர்வெண்ணில் மாற்றங்கள் ஏற்படும் நிகழ்வு ....

அ) இராமன் ஒளிச்சிதறல் ஆ) ராலே

இ) டிண்டால் விளைவு ஈ) மீ-ஒளிச்சிதறல்

29. படுகதிரின் அதிர்வெண்ணுக்குச் சமமான அதிர்வெண்ணைக் கொண்ட நிறமாலை வரிகள் ....

அ) இராமன் வரிகள் **ஆ) ராலே வரிகள்**

இ) ஸ்டோக்ஸ் வரிகள் ஈ) ஆண்டிஸ்டோக்ஸ் வரிகள்

30. இரு பரப்புகளுக்கு இடைப்பட்ட ஒளிபுகும் தன்மை கொண்ட ஊடகம் ....

அ) லென்சு ஆ) குவிலென்சு

இ) குழிலென்சு ஈ) சமதள ஆடி

31. குவி லென்சு என்பவை ஒளிக்கற்றைகளை ஒரு புள்ளியில் குவிப்பதால் இவை ....

அ) விரிக்கும் லென்சு **ஆ) குவிக்கும் லென்சு**

இ) தட்டக் குவிலென்சு ஈ) தட்டக்குழிலென்சு

32. குழி லென்சு என்பது

அ) குவிக்கும் லென்சு **ஆ) விரிக்கும் லென்சு**

இ) இருபுறக் குவிலென்சு ஈ) ஏதுமில்லை

33. கோளாக லென்சுகளில் இதிலிருந்து தொலைவுகள் அளவிடப்படுகின்றன.

அ) ஒளிமையம் ஆ) முக்கியகுவியம்

இ) முக்கிய அரசு ஈ) வளைவு மையம்

34. லென்சின் ஒரு பகுதியின் வழியே எந்த விலகலும் அடையாமல் ஒளி கடந்து செல்லும் புள்ளி

அ) குவியம் ஆ) வளைவு ஆரம்

இ) துருவங்கள் **ஈ) ஒளிமையம்**

35. குவிலென்சில் மாய பிம்பம் உருவாக்கப்படுவது பொருள் எந்நிலையில் வைக்கப்படும்போது

அ) Fல் ஆ) ஈறிலாத்தொகையில்

இ) F மற்றும் 2Fக்கும் இடையில் **ஈ) Fக்கும் லென்சிற்கும் இடையே**

36. கோளக லென்சுகளால் பிம்பம் உருவாக்கப்படுவது இந்நிகழ்வினால்

அ) எதிரொளிப்பு **ஆ) ஒளிவிலகல்**

இ) குறுக்கீடு ஈ) நிறப்பிரிகை

37. ஸ்நெல் விதி =

அ) m = $\frac{\sin i}{\sin r}$ ஆ) m == $\frac{c_a}{c_m}$

இ) m = $\frac{\sin r}{\sin i}$ ஆ) m == $\frac{c_m}{c_a}$

38. தலைகீழ், மெய், பொருளின் அதே அளவுடைய பிம்பம் பெற பொருளானது குவிலென்சின் இந்நிலையில் வைக்கப்பட வேண்டும்.

அ) Fல் **ஆ) 2Fல்**

இ) Oக்கும் Fக்கும் இடையே ஈ) ஈறிலாத் தொலைவில்

39. ஒரு ஒளிக்கதிர் நீரிலிருந்து கண்ணாடிக்குள் நுழையும்போது

அ) ஒளியின் வேகம் குறைவதால் செங்குத்துக் கோட்டை நோக்கி வளையும்

ஆ) ஒளியின் வேகம் அதிகரிப்பதால் செங்குத்துக்கோட்டை நோக்கி வளையும்

இ) ஒளியின் வேகம் அதிகரிப்பதால் செங்குத்துக்கோட்டிலிருந்து விலகிச் செல்லும்

ஈ) ஒளியின் வேகம் குறைவதால் செங்குத்துக் கோட்டிலிருந்து விலகிச் செல்லும்

40. குழி லென்சு பயன்படுத்தப்படுவது

அ) கேமரா ஆ) உருப்பெருக்கம் லென்சு

இ) மைக்ரோஸ்கோப் (நுண்ணோக்கி) **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

41. லென்சு வாய்ப்பாடு

அ) $\frac{h^1}{h}$ **ஆ) $\frac{1}{f} = \frac{1}{v} - \frac{1}{u}$**

இ) $\frac{v}{u}$ ஈ) $(\mu-1)\left[\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right]$

42. லென்சினால் உருவாக்கப்படும் உருப்பெருக்கம்

அ) $\frac{\text{பிம்பத்தின் உயரம்}}{\text{பொருளின் உயரம்}}$ ஆ) $\frac{\text{பிம்த்தின் தொலைவு}}{\text{பொருளின் தொலைவு}}$

இ) அ மற்றும் ஆ ஈ) $\frac{1}{v} = \frac{1}{v} - \frac{1}{f}$

43. குவி லென்சினால் உருவாக்கப்படும் மெய் பிம்பங்கள் எப்பொழுதும்

அ) தலைகீழானவை ஆ) நேரானவை

இ) பொருளின் அருகில் இருக்கும் ஈ) ஏதுமில்லை

44. ஒரு குவிலென்சு மிகச்சிறிய, தலைகீழான, மெய் பிம்பத்தை உருவாக்குகிறது எனில் ஒரு பொருள் வைக்கப்படும் நிலை

அ) ஈறிலாத் தொலைவில் ஆ) Fல்

இ) Fக்கும் Cக்கும் இடையே ஈ) 2Fக்கு அப்பால்

45. பொருளானது Fல் வைக்கப்படும்போது குவிலென்சால் உருவாக்கப்படும் பிம்பத்தின் தன்மை

அ) ஈறிலாத் தொலைவில் ஆ) Fல்

இ) Fக்கும் Cக்கும் இடையே **ஈ) மிக பெரிதாக்கப்பட்டது**

46. லென்சிற்கும் குவியத்திற்கும் இடையேயான தொலைவு

அ) குவிய தொலைவு ஆ) முக்கிய அச்சு

இ) வளைவு ஆரம் ஈ) மையம்

47. ஒரு நபர் ஒரு குழிலென்சை சாதாரண உருப்பெருக்க லென்சாக பயப்டுத்துகிறார் எனில் பொருள் வைக்கப்பட்ட வேண்டிய தொலைவு

அ) குவியதூரம் ஒன்றைவிட குறைவு ஆ) குவியதூரம் ஒன்றைவிட அதிகம்

இ) குவியதூரம் இருமடங்கு குறைவு ஈ) குவியதூரம் இருமடங்கு அதிகம்

48. முக்கிய அச்சு லென்சின் பரப்பினை சந்திக்கும் புள்ளி

அ) வளைவு ஆரம் ஆ) வளைவு மையம்

இ) குவிய தூரம் **ஈ) துருவம்**

49. குழிலென்சினால் உருவாக்கப்படும் பிம்பம்

அ) எப்போதும் மாயபிம்பம் மற்றும் பெரியதாக்கப்பட்ட பிம்பம்

ஆ) எப்போதும் மாயபிம்பம் மற்றும் சிறிதாக்கப்பட்ட பிம்பம்

இ) எப்போதும் மெய்பிம்பம்

ஈ) சிலநேரங்களில் மெய், சில நேரங்களில் மாய பிம்பம்

50. ஒரு பொருள் 25செ.மீ தொலைவில் ஒரு குவி லென்சின் முன் வைக்கப்படுகிறது. அதன் குவியதூரம் 10 செ.மீ எனில் பிம்பத்தின் தொலைவு .... செ.மீ ஆகும்

அ) 50 **ஆ) 16.66**

இ) 6.66 ஈ) 10

51. ஒரு குவிலென்சிலிருந்து ஒரு பொருள் 12 செ.மீ தொலைவில் வைக்கப்பட்டுள்ளது. அதன் குவிய தொலைவு 10 செ.மீ பிம்பமானது

அ) பெரிதாக்கப்பட்ட மாயபிம்பம் ஆ) அளவில் குறைந்த மெய்பிம்பம்

இ) அளவு குறைந்த மாயபிம்பம் **ஈ) பெரிதாக்கப்பட்ட மெய்பிம்பம்**

52. லென்சு உருவாக்குவோர் சமன்பாடு என்பது

அ) $\frac{h^1}{h}$ ஆ) $\frac{1}{f} = \frac{1}{v} - \frac{1}{u}$

இ) $\frac{v}{u}$ **ஈ)** $\mathbf{\frac{1}{f} = (\mu-1)\left[\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right]}$

53. ஒரு குவிலென்சில் ஒரு பொருள் ஒளிமையம் மற்றும் ஈறிலாத் தொலைவிற்குமிடையே வைக்கப்படும்போது, பிம்பங்கள் உருவாகும் நிலை

அ) Fல் ஆ) 2Fல்

இ) Oக்கும் Fக்கும் இடையே ஈ) 2Fக்கு அப்பால்

54. லென்சுன் குவியதொலைவின் தலைகீழ் மதிப்பு

அ) உருப்பெருக்கம் **ஆ) திறன்**

இ) முக்கிய குவியம் ஈ) ஏதுமில்லை

55. மனிதர்களின் கண்ணில் (ரெட்டினாவில்) ஏற்படும் பிம்பம்

அ) நேரான மாயபிம்பம் **ஆ) தலைகீழான மெய்பிம்பம்**

இ) தலைகீழான மாயபிம்பம் ஈ) நேரான மெய்பிம்பம்

56. தெளிவுறுக்காட்டியின் மீச்சிறு தொலைவு

அ) 25மீ ஆ) 20 செ.மீ இ) 20 மீ **ஈ) 25 செ.மீ**

57. விழிலென்சு தன் குவிய தூரத்தை மாற்றிக் கொள்ள இத்தசைகள் உதவுகின்றன.

அ) பாவை **ஆ) சிலியரி தசைகள்**

இ) கார்னியா ஈ) ஐரிஸ்

58. கண்ணில் படும் ஒளியின் நிகழ்வு

அ) எதிரொளிப்பு **ஆ) ஒளிவிலகல்**

இ) திறன் ஈ) விழி ஏற்பமைவுத்திறன்

59. பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் இதன் வழியாகவே விழித்திரையை அடைகின்றன.

அ) சிலியரி தசைகள் **ஆ) பாவை**

இ) கார்னியா ஈ) ஐரிஸ்

60. கண்விழியின் விட்டம்

அ) 2.3 செ.மீ ஆ) 23 செ.மீ

இ) 2.3 மி.மீ ஈ) 23 மி.மீ

61. இதனை அடையும் ஒளிக்கதிர்கள் ஒளிவிலகல் அடையச் செய்யப்பட்டு விழிலென்சின் திறன்மீது குவிக்கப்படுகிறது.

அ) லென்சு **ஆ) கார்னியா**

இ) ஐரிஸ் ஈ) பாவை

62. கண்ணில் பொருளின் பிம்பம் உருவாகும் பகுதி

அ) கார்னியா ஆ) ஐரிஸ்

இ) பாவை **ஈ) ரெட்டினா (அ) (விழித்திரை)**

63. ஒரு நபர் 50 செ.மீக்கு அப்பால் தெளிவாக பொருள்களை காண முடிவதில்லை. பார்வையை சரிசெய்யத் தேவையான லென்சின் திறன்.

அ) +5D ஆ) -0.5D **இ) -2D** ஈ) +2D

64. ஒரு நபர் கிட்டப்பார்வை குறைபாடு உடையவர் எனில் அவரால்

அ) அருகில் உள்ள பொருள்களை மட்டும் காண முடியும்

ஆ) அருகில் மற்றும் தூரப்பொருட்களை காண முடியும்

இ) தொலைவிலுள்ள பொருட்களை காண முடியும்

ஈ) ஏதுமில்லை

65. கிட்டப்பார்வையை சரிசெய்ய

அ) குழிலென்சு ஆ) குவிலென்சு

இ) லென்சின் கூட்டமைப்பு ஈ) ஏதுமில்லை

66. ஒரு குவி லென்சு கண்ணின் எக்குறைபாட்டை சரி செய்ய உதவுகிறது?

அ) பார்வைச்சிதறல் ஆ) கிட்டப்பார்வை

இ) தூரப்பார்வை ஈ) விழி ஏற்பமைவுத் திறன்

67. விழி ஏற்பமைத்திறன் குறைபாடு ஏற்படுவது ஏனெனில்

அ) வயது முதிர்வு ஆ) விழிக்கோளம் நீண்டு விடுதல்

இ) விழிக்கோளம் சுருங்குதல் ஈ) கண்ணில் புண்கள்

68. விழி ஏற்பமைவுத் திறன் குறைபாடு ['பிரெஷ்மையோபியா'] இதனால் சரி செய்யப்படுகிறது

அ) குழிலென்சு ஆ) குவிலென்சு

இ) இருகுவிய லென்சுகள் ஈ) உருளை லென்சுகள்

69. பார்வைச் சிதறல் குறைபாடு ['அஸ்டிக்மாடிஷம்'] உடைய கண்களால் இதனை தெளிவாகக் காண இயலாது

அ) இணையான கோடுகள் ஆ) கிடைமட்டக்கோடுகள்

இ) அ மற்றும் ஆ ஈ) ஏதுமில்லை

70. பார்வை சிதறல் குறைபாட்டினை சரி செய்ய

அ) உருளை லென்சுகள் ஆ) வட்டவடிவ லென்சுகள்

இ) தட்டை லென்சுகள் ஈ) ஏதுமில்லை

71. புவிப்பரப்பில் உள்ள பொருள்களை காண்பதற்கு ஏற்றவை

அ) வானியல் தொலை நோக்கிகள் **ஆ) நிலப்பரப்பு தொலை நோக்கிகள்**

இ) கூட்டு நுண்ணோக்கிகள் ஈ) எளிய நுண்ணோக்கிகள்

72. கூட்டு நுண்ணோக்கியில் இரு குவிலென்சுகள் பயன்படுத்தப்படுவதன் காரணம்

அ) உருப்பெருக்கத்தை அதிகரிக்க ஆ) குவிய தொலைவு அதிகரிக்க

இ) குவிய தொலைவினைக் குறைக்க **ஈ) அ மற்றும் இ**

73. குறியீட்டு மரபின்படி குவி லென்சின் திறன் மற்றும் குழி லென்சின் திறன்

அ) நேர்க்குறி, எதிர்க்குறி ஆ) எதிர்க்குறி, நேர்க்குறி

இ) நேர்க்குறி, நேர்க்குறி ஈ) எதிர்க்குறி, எதிர்க்குறி

74. ஒரு எளிய நுண்ணோக்கியில் உள்ளவை

அ) குறைந்த குவிய தூரம் கொண்ட குவிலென்சு

ஆ) அதிக குவியதூரம் கொண்ட குழிலென்சு

இ) குறைந்த குவியதூரம் கொண்ட குழிலென்சு

ஈ) அதிக குவிய தூரம் கொண்ட குவிலென்சு

75. எளிய நுண்ணோக்கியின் பயன்பாடு

அ) கடிகாரம் பழுதுபார்க்க

ஆ) பூக்களின் பாகங்களை உற்று நோக்க

இ) தடய அறிவியல் துறையில்

ஈ) இவை அனைத்தும்

76. ஒரு கூட்டு நுண்ணோக்கியின் உருப்பெருக்கம்

அ) $M = 1 + \frac{D}{f}$ ஆ) $m = \frac{v}{u}$

இ) $m = \frac{v}{u}\left(1 + \frac{D}{fe}\right)$ ஈ) $m = \frac{v}{u}\left(1 - \frac{D}{fe}\right)$

77. நுண்ணோக்கியின் உருப்பெருக்குத்திறன் அதிகமாக இருப்பதற்குக் காரணம்

அ) அதிக குவிய தூரம் கொண்ட கண்ணருகு லென்சு

ஆ) பொருளகு லென்சின் குவியதூரம்

இ) குறைந்த குவிய தூரம் கொண்ட கண்ணருகு லென்சு

ஈ) அதிக குவிய தூரம் கொண்ட பொருளருகு லென்சு

78. விண்மீன்கள் போன்ற வானியல் பொருட்களைக் காணப்பயன்படுவது

அ) எளிய நுண்ணோக்கி ஆ) கூட்டு நுண்ணோக்கி

இ) நிலப்பரப்பு தொலைநோக்கி **ஈ) வானியல் தொலைநோக்கி**

2. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஒளிக்கதிரின் பாதை **ஒளிக்கதிர்** என்று அழைக்கப்படுகிறது.
2. ஒரு ஒளிபுகும் ஊடகத்தின் ஒளி விலகல் எண் எப்போதும் ஒன்றை விட **அதிகம்**
3. படுகின்ற ஒளிக்கற்றையின் ஆற்றலும் சிதறலடைந்த கற்றையின் ஆற்றலும் சமமாக இருந்தால் அது **மீட்சிச்** சிதறல் எனப்படும்
4. ராலே சிதறல் விதிப்படி, சிதறல் அளவானது, படுகின்ற ஒளிக்கதிரின் **அலை நீளத்தின்** நான்மடிக்கு எதிர்தகவில் இருக்கும்.
5. **ஐரிஸ் (Iris)** கண்ணிற்குள் நுழையும் ஒளியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது.
6. நீல மற்றும் பச்சை ஒளி வெவ்வேறு **அலைநீளம்** மற்றும் **அதிர்வெண்** உடையவை.
7. ஒளிவிலகல் என்பது ஒளி வெவ்வேறு ஊடகத்தில் வெவ்வேறு **திசைவேகம்** உடன் செல்வதால் உண்டாகிறது.
8. ஒளிவிலகல் கோணம் சிகப்பு நிறத்திற்கு **குறைவாகவும்** ஊதா நிறத்துக்கு **அதிகமாகவும்** இருக்கும்.
9. ஊடகத்தின் ஒளிவிலகல் எண் ஒளியின் **அலைநீளத்தைச்** சார்ந்தது
10. ஒளிக்கற்றைகள் ஊடகத்தில் உள்ள துகள்களுடன் ஆற்றும் இடைவினை **ஒளிச்சிதறல்**
11. ஒளிச்சிதறல் **துகளின் அளவு மற்றும் தன்மை**யைப் பொருத்தது.
12. மேகக் கூட்டங்கள் வெண்மை நிறமாகக் காட்சியளிக்கக் காரணம் **மீ-சிதறல்**
13. கலிலியோ தொலைநோக்கியில் கண்ணருகு லென்சாகப் பயன்படுவது **குவிலென்சு**
14. உருப்பெருக்கத்தின் மதிப்பு 1ஐ விட அதிகமாக இருந்தால் **பொருளைவிட பெரிய** பிம்பம் கிடைக்கும்.
15. பொருள் எப்போதும் லென்சிற்கு **இடப்** பக்கம் வைக்கப்பட வேண்டும்.
16. லென்சின் திறனின் அலகு **டையாப்டர்**
17. லென்சை உருவாக்குபவர் லென்சின் **வளைவு ஆரம்** மற்றும் **ஒளிவிலகல் எண்** அறிநிதிருக்க வேண்டும்
18. நுட்பமான உணர் உறுப்பு **கண்**
19. 1D = **$1m^{-1}$**
20. கண்ணின் **ஐரிஸ்** ஒளிப்படக் கருவியின் முகப்பைப் போன்றது
21. **ஸ்கிளிரால்** என்னும் வலிமையான சவ்வினால் கண்ணின் உள்ளுறுப்புகள் பாதுகாக்கப்படுகின்றன.
22. இயற்கையில் அமைந்த குவி லென்சு **விழிலென்சு**
23. **ஐரிஸ்** கண்ணின் நிறமுடைய பகுதி
24. அருகில் உள்ள பொருட்களை காணும்போது சிலியரித்தசைகள் சுருங்குவதால் **விழிலென்சின்** தடிமன் அதிகரிக்கிறது.
25. இரு அடுத்தடுத்த ஒளி துடிப்புகளுக்கு இடைபட்ட கால இடைவெளி **1/16** ஐ விடக்குறைவு
26. சேய்மைப் புள்ளி என்பது **ஈறிலாத்தொலைவில்** அமைந்திருக்கும்

27. விழி லென்சில் ஏற்படும் கண்புரை **பார்வை சிதறல் குறைப்பாட்டுக்கு** எடுத்துக்காட்டு
28. பொருளின் பிம்பம் **ரெட்டினாவின்** மீது உருவாகிறது
29. மையோபியா என்பது **கிட்டப்பார்வையின்** மறுபெயர்
30. வானவில் தொலைநோக்கியில் உருவாகும் பிம்பம் **தலைகீழானது**
31. ஒளி எதிரொளிப்பு தொலைநோக்கிகளில் **கோளக ஆடிகள்** பயன்படுத்தப்படுகின்றன.
32. நகரும் நுண்ணோக்கி **வெர்னியர்** தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது
33. **நகரும் நுண்ணோக்கி** மிகச்சிறய தொலைவுகளை மிகத்துல்லியமாக அளந்தறியக்கூடிய மிகச்சிறந்த கருவிகளில் ஒன்றாகும்.
34. கேஸ்கிரைன் தொலைநோக்கிகள் போன்றவை **ஒளி எதிரொளிப்பு தொலைநோக்கிக்கு** எடுத்துக்காட்டுகள்
35. நகரும் நுண்ணோக்கியின் மீச்சிற்றளவு **0.01மி.மீ**

3. சரியா (அ) தவறா?

1. அடர்வு மிகு ஊடகத்தில் ஒளியின் திசைவேகமானது, அடர்வு குறை ஊடகத்தில் இருப்பதை விட அதிகமாக இருக்கும்.
   விடை: தவறு, அடர்வு மிகு ஊடகத்தில் ஒளியின் திசைவேகமானது, அடர்வு குறை ஊடகத்தில் இருப்பதைவிட குறைவாக இருக்கும்.
2. லென்சின் திறனானது லென்சின் குவிய தொலைவைச் சார்ந்தது.
   விடை: சரி
3. விழி லென்சின் குவிக்கும் திறன் அதிகரிப்பதால் தூரப்பார்வை ஏற்படுகிறது.
   விடை: சரி
4. குவிலென்சானது, எப்போதும் சிறிய மாய பிம்பத்தையே உருவாக்கும்.
   விடை: தவறு, குழிலென்சானது எப்போதும் சிறிய மாயபிம்பத்தை தரும்.
5. சூரியன் உள்ளிட்ட அனைத்து விண்மீன்களும் ஒளிராத பொருள்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.
   விடை: தவறு, சூரியன் உள்ளிட்ட அனைத்து விண்மீன்களும் தங்களுடைய சுய ஒளியை வெளியிடுவதால் அவை ஒளிரும் பொருள்கள் எனப்படும்.
6. ஒளி பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை
   விடை: சரி
7. ஒளி எப்போதும் வளைகோட்டில் செல்கிறது
   விடை: தவறு, ஒளி எப்போதும் நேர்க்கோட்டில் செல்கிறது.
8. ஒளி பரவுவதற்கு ஒரு உலோக ஊடகம் தேவை
   விடை: தவறு, ஒளி பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை. வெற்றிடங்கள் வழியாகக்கூட ஒளிக்கதிர் செல்லும்.
9. ஒளிவிலகலானது இருஒளிவிலகல் விதிகளுக்கு உட்பட்டு அமைகிறது.
   விடை: சரி
10. ஒளியின் வெவ்வேறு நிறங்கள் ஒரே அலை நீளத்தையும் அதிர்வெண்ணையும் பெற்றிருக்கும்.

விடை: தவறு, ஒளியின் வெவ்வேறு நிறங்கள் வெவ்வேறு அலை நீளங்களையும் அதிர்வெண்களையும் பெற்றிருக்கும்.

11. படுகதிரும், விலகுகதிரும் வெவ்வேறு தளங்களில் அமையும்

விடை: தவறு, படுகதிரும் விலகு கதிரும் ஒரே தளத்தில் அமையும்.

12. ஊடகத்தின் ஒளிவிலகல் எண் குறைவாக இருப்பதால் ஒளியின் வேகம் குறைவாக இருக்கும்.

விடை: தவறு, ஒளிவிலகல் எண் அதிகம் உள்ள ஊடகத்தில் ஒளியின் திசைவேகம் குறைவாக இருக்கும்.

13. அடர்வுமிகு ஊடகத்திலிருந்து அடர்வுகுறை ஊடகத்திற்கு ஓர் ஒளிக்கதிர் செல்லும்போது செங்கத்துக்கோட்டை விட்டு விலகிச் செல்லும்.

விடை: சரி

14. வெள்ளொளி என்பது பல்வேறு நிறங்களை உள்ளடக்கியது

விடை: சரி

15. வெள்ளொளியானது ஒளிபுகும் ஊடகத்தில் நுழைவதால் மட்டுமே நிறமாலை தோன்றும்.

விடை: தவறு, வெள்ளொளி ஒளிபுகும் ஊடகத்தில் செல்லும்போது வெவ்வேறு நிறங்கள் வெவ்வேறு கோண அளவுகளில் அடைவதால் நிறப்பிரிகை ஏற்பட்டு நிறமாலை தோன்றும்.

16. ஸ்நெல் விதிப்படி விலகுகோணமானது ஊடகத்தின் ஒளிவிலகல் எண்ணைச் சார்ந்து அமையும்.

விடை: சரி

17. ஒரு ஊடகத்தின் ஒளிவிலகல் எண் ஒளிக்கதிரின் அலை நீளத்தைச் சார்ந்தது.

விடை: சரி

18. சூரிய உதயம் மற்றும் மறைவின் போது சூரியன் சிவப்பாகக் காட்சியளிப்பது ஒளிச்சிதறலால் ஆகும்.

விடை: சரி

19. ஒளிக்கற்றையின் பாதை புலனாவது ஒளிவிலகலுக்கு எடுத்துக்காட்டு

விடை: தவறு, தாதுகளால் ஒளிக்கற்றையானது சிதறலடிக்கப்படுவதால், ஒளிக்கற்றையின் பாதை புலனாகிறது

20. இருபுறமும் உள்நோக்கிக் குழிந்த பரப்புகளைக் கொண்டது குழிலென்சு அல்லது இருபுறக்குழிலென்சு

விடை: சரி

21. படுகதிரின் அதிர்வெண்ணுக்குச் சமமான அதிர்வெண்ணைக் கொண்ட நிறமாலை வரிகள் 'ராலே வரிகள்'

விடை: சரி

22. பொருள் ஈறிலாத் தொலைவில் வைக்கப்படும் போது பிம்பத்தின் அளவு மாறாது.

விடை: தவறு, பொருள் ஈறிலாத் தொலைவில் வைக்கப்படும் போது பிம்பத்தின் அளவு பொருளின் அளவைவிடப் பலமடங்கு சிறியதாக இருக்கும்.

23. வெளியாட்களைத் தெரிந்து கொள்ள வீட்டின் கதவுகளில் ஏற்படுத்தப்படும் உளவுத்துளைகளில் குவிலென்சுகள் பொருத்தப்படுகின்றன.

விடை: தவறு, வெளியாட்களைத் தெரிந்து கொள்ள வீட்டின் கதவுகளில் ஏற்படுத்தப்படும் உளவுத் துளைகளில் குழிலென்சுகள் பொருத்தப்படுகின்றன.

24. முதன்மை அச்சுக்குச் செங்குத்தாக கீழ்நோக்கி அளக்கப்படும் அளவுகளை எதிர்க்குறியாகக் கொள்ள வேண்டும்.

விடை: சரி

25. விழித்திரையில் தலைகீழான மெய்ப்பிம்பம் தோற்றுவிக்கப்படுகிறது.

விடை: சரி

26. சிலியரித்தசைகள் சுருங்கி விரிவடையும்போது கண்ணில் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை.

விடை: தவறு, சிலியரித்தசைகள் சுருங்கி விரிவடையும்போது லென்சின் வளைவும் குவியத் தொலைவும் மாற்றியமைக்கப்படுகிறது.

27. வயது முதிர்வு தூரப்பார்வை விழி ஏற்பமைத்திறன் குறைபாட்டினால் ஏற்படுகிறது.

விடை: சரி

28. சிறிய எழுத்துக்களை படிக்க உதவுவது தொலைநோக்கி

விடை: தவறு, எளிய நுண்ணோக்கி மூலம் எழுத்துக்களைப் படிக்கலாம்.

29. கூட்டு நுண்ணோக்கியின் உருப்பெருக்கத் திறன் எளிய நுண்ணோக்கியின் உருப் பெருக்குத்திறனை விட அதிகம்.

விடை: சரி

4. பொருத்துக

1. பொருத்துக

1. ரெட்டினா	-	அ) கண்ணில் ஒளிக்கதிர் செல்லும் பாதை
2. கண்பார்வை	-	ஆ) சேய்மைப் புள்ளி விழியை நோக்கி நகர்தல்
3. சிலியரித் தசைகள்	-	இ) அண்மைப் புள்ளி விழியை விட்டு விலகிச் செல்லுதல்
4. கிட்டப்பார்வை (மையோபியா)	–	ஈ) விழித்திரை
5. தூரப்பார்வை	-	உ) விழி ஏற்பமைவுத் திறன்

விடை: 1 – ஈ, 2 – அ, 3 – உ, 4 – ஆ, 5 – இ

2. பொருத்துக

1. ஒளியை வெளியிடும் பொருள்கள்	-	அ) உயர் அதிர்வெண்
2. சுய ஒளியை வெளியிடுபவை	-	ஆ) உயர் அலைநீளம்
3. ஊதா ஒளி	-	இ) ஒளிமூலங்கள்
4. சிகப்பு ஒளி	-	ஈ) ஒளிரும்பொருட்கள்

விடை: 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ

3. பொருத்துக

1. நிறங்கள் தனித்தனியாக பிரிவது	-	அ) ஒளிவிலகல்
2. பொருள்களைக் காண இயலுவது	-	ஆ) ஒளி எதிரொளித்தல்
3. ஒளிக்கதிரின் விலகல்	-	இ) நிறப்பிரிகை
4. கடலின் நீலநிறம்	-	ஒளிச்சிதறல்

விடை: 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ

4. பொருத்துக

1. உருப்பெருக்கம் - அ) உயரம்/தொலைவு
2. லென்சு உருவாக்குவோர் சமன்பாடு - ஆ) ஒளி எதிரொளித்தல்
3. ஒரு லென்சின் திறன் - இ) $\frac{பிம்பத்தின் உயரம்}{பொருளின் உயரம்}$
4. காட்சிகோணம் - ஈ) (μ-1).$\left[\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right]$

விடை: 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ

5. பொருத்துக

1. கண்ணிண் உள் உறுப்பிகளை பாதுகாக்கும் - அ) ஐரிஸ்
2. ஒளியை விலகலடையச் செய்யும் - ஆ) ஸ்கிளிரா
3. ஒளி செல்லும் அளவைக் கட்டுப்படுத்தும் - இ) பாவை
4. ஒளியின் பாதை - ஈ) கார்னியா

விடை: 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ

6. பொருத்துக

1. விழிக்கோளத்தின் விட்டம் - அ) 0.01 மி.மீ
2. நகரும் நுண்ணோக்கி - ஆ) 2.3 செ.மீ
3. தெளிவுறுக்காட்சியின் சேய்மைப்புள்ளி - இ) 1.437
4. கண்லென்சின் ஒளிவிலகல் - ஈறிலாத் தொலைவு

விடை: 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ

7. பொருத்துக

1. மையோபியா - அ) தூரப்பார்வை
2. ஹைப்பர் மெட்ரோபியா - ஆ) இருபுறக்குவி லென்சுகள்
3. பிரெஷ்மையோபியா - இ) உருளைவடிவ லென்சுகள்
4. அஸ்டிக்மாடிஸம் - ஈ) கிட்டப்பார்வை

விடை: 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ

8. பொருத்துக

1. ஈறிலாத் தொலைவில் - அ) Fக்கும் 2Fக்குமிடையே
2. 2Fக்கு அப்பால் - ஆ) 2Fல்
3. 2Fல் - இ) 2Fக்கு அப்பால்
4. Fக்கும் 2Fக்கும் இடையே - ஈ) F_2

விடை: 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ

9. பொருத்துக

கருவிகள்		**பயன்படுத்தப்படும் லென்சுகள்**
1. எளிய நுண்ணோக்கி	-	அ) ஒரு குழிலென்சு மற்றும் ஒரு குவிலென்சு
2. கூட்டு நுண்ணோக்கி	-	ஆ) ஒரு குவிலென்சு
3. வானியல் தொலைநோக்கிகள்	-	இ) மூன்று குவிலென்சுகள்
4. நிலப்பரப்பு தொலைநோக்கிகள்	-	ஈ) இரு குவிலென்சுகள்

விடை: 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ

5. சரியான கூற்றைத் தேர்வு செய்க

அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி, ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று

இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் சரியன்று

ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது

1. கூற்று: ஊடகத்தின் ஒளிவிலகல் எண் அதிகமாக இருந்தால் (அடர்விகு ஊடகம்), அந்த ஊடகத்தில் ஒளியின் திசைவேகம் குறைவாக இருக்கும்.

   காரணம் : ஊடகத்தின் ஒளிவிலகல் எண், ஒளியின் திசைவேகத்திற்கு எதிர்த்தகவில் இருக்கும்.

   விடை: அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்

2. கூற்று: விழி லென்சின் குவிக்கும் திறன் அதிகரிப்பதால், கிட்டப்பார்வை என்னும் பார்வைக் குறைபாடு தோன்றுகிறது.

   காரணம்: குழிலென்சைப் பயன்படுத்தி கிட்டப்பார்வைக் குறைப்பாட்டைச் சரிசெய்யலாம்.

   விடை: ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி, ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று

3. கூற்று: காற்றுக்குமிழிகள் நீரில் பிரகாசிக்கும்.

   காரணம்: நீரில் காற்றுக் குமிழிகள் பிரகாசிப்பது ஒளிவிலகலினால் நடைபெறுகிறது.

   விடை: இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் சரியன்று

4. கூற்று: வானம் நீலநிறமாகத் தோன்றுவது நீலநிற ஒளிச்சிதறலால் ஏற்படுகிறது.

   காரணம்: கண்ணுக்குப் புலனாகும் ஒளியில் நீலநிறம் குறைந்த அலைநீளமுடையது.

   விடை: அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்

5. கூற்று: சூரியன் மறையும்போது அது சிகப்பாகத் தோன்றுகிறது.

   காரணம்: ஒளிச்சிதறல் அலைநீளத்திற்கு நேர் விகிதத்தில் இருக்கும்.

   விடை: இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் சரியன்று

6. கூற்று: 10செ.மீ குவியதூரமுடைய ஒரு குவிலென்சு (m=1) நீரில் மூழ்கி இருக்கும்போது $\mu = \frac{4}{3}$ அதன் குவியதொலைவு 40 செ.மீ

   காரணம்: $\frac{\mu_1 - \mu_m}{\mu_m}\left[\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right]$

   விடை: அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்

7. கூற்று: ஒளியின் அலைநீளம் ஊடகத்தின் ஒளிவிலகல் எண்ணைச் சார்ந்ததல்ல.

   காரணம்: வெவ்வேறு நிறங்கள் வெற்றிடத்தில் வெவ்வேறு வேகத்துடன் செல்கின்றன.

   விடை: இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் சரியன்று

8. கூற்று: விண்மீன்கள் மின்னுகின்றன. ஆனால், கோள்கள் மின்னுவதில்லை.

   காரணம்: விண்மீன்கள் கோள்களைவிட அளவில் மிகப்பெரியவை.

